

சங்கீதபூஷணம்
செல்வி தங்கலட்சுமி செல்லத்துரை



கலாபூஷணம்
செல்வி சறோஜா தம்பு

# இரு இசைச் செல்விகளின் இசைவாழ்வும் பணியும்



## கலாபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின்

## ஞாபகார்த்தக் கையேடு

## 2021/ 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் திரு.எல்.திலகநாயகம் போல் அவர்களின் 13ஆம் ஆண்டு ஞாபகர்த்தமாக

25.01.2023 அன்று
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில்
நிகழ்த்தப்பட்ட

# "திலகார்ப்பணம்"

**நிகழ்வின் போது வெளியிடப்பட்டது.**



தொகுப்பு:


இசைக்கலாவித்தகர் திருமதி. குமுதா உமாகாந்தன்
ஆசிரியர்,
யா/ சென் ஜோண்ஸ் கல்லூரி,
'சோமராகம்" இசைமன்றம்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

யாழ்ப்பாணத்தில் 1990களில் கர்நாடக சங்கீதம் மிக உன்னத நிலையை அடைந்திருந்தது. இசை ரத்தினங்கள் ஒளிர்ந்த காலம். அவ்வாறு தமது இசை வித்துவத்தை மேடையிலே வெளிக்காட்டி தமக்கான ஓர் தனி இடத்தை தக்க வைத்துக் கொண்டவர்களுள் ஒருவரே என் குருநாதராகிய மறைந்த சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல் அவர்கள். அவரிடம் நானும் இசையைக் கற்கும் வாய்ப்புக் கிடைத்தமை எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

குருவிற்கு செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவையாகும். இதனால் எனது குருநாதர் மறைந்த தினத்தில் அவரது சிறப்புக்களை ஞாபகப்படுத்தும் முகமாகவும், எமது இளைய சமுதாயத்திற்கு இப்பெரியவர்களைப் பற்றி அறியச்செய்யும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டதே திலகனுக்கு அர்ப்பணம் செய்யும் "திலகார்ப்பணம்" எனும் நிகழ்வாகும்.

இந்நிகழ்வில் எம்மிடையே வாழ்ந்து கொண்டு இருக்கின்ற மூத்த கலைஞர் ஒருவரை கௌரவித்து அவரிற்கு "இசைத்திலகம்" எனும் விருதளித்து, அக்கலைஞரது வாழ்வும் பணியும் எனும் சிறிய கையேட்டினையும் எழுதி வெளியிட்டு வருகின்றோம். அந்த வகையில் 2019 ஆம் ஆண்டின் பின்னர் "கொரோனா" கொடிய நோய் காரணமாக நிகழ்ச்சிகளை நடாத்த முடியாமல் போகவு 2020 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வயலின் வாத்தியத்தை உருவாக்கி வரும் திரு.வி.பாலச்சந்திரன் அவர்களை அவரது இல்லத்திற்கே சென்று வாழ்த்தி கௌரவித்திருந்தோம். அத்துடன் "போல்சேர்" அவர்களின் நிகழ்ச்சியை நிகழ்நிலை ஊடாக வலை ஒளியில் (Youtube) தரவேற்றம் செய்தோம். அவ்வாண்டிற்கான கௌரவ கலைஞராக செல்வி. தங்கலட்சுமி செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைத் தெரிவு செய்திருந்த போதும் நாட்டில் ஏற்பட்ட இடர் காரணமாக அந்நிகழ்வை நடாத்த முடியாமல் போனது.

அதேபோன்று 2022ஆம் ஆண்டிற்குரிய நிகழ்வுகள் ஆரம் பித்திருந்த போதும் கல்வியாண்டாலும், பொதுப் பரீட்சைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் நடாத்த வேண்டிய மார்கழி மாதத்தில் நடத்த முடியாமல் போயிற்று. இரண்டு நிகழ்வுகளையும் 25.01.2023 அன்று நிகழ்த்துவதில் திருப்தியடைகின்றேன். இது இறைவனின் ஆணை போலும்.

அந்தவகையில் 2021ஆம் ஆண்டிற்குரிய கௌரவத்தை சங்கீதபூஷணம் செல்வி. தங்கலட்சுமி செல்லத்துரை அவர் களிற்கும், 2022ஆம் ஆண்டிற்குரிய கௌரவத்தை சங்கீதபூஷணம் செல்வி. சறோஜா தம்பு அவர்களிற்கும் வழங்கி அவர்தாள் பணிந்து வாழ்த்துவதில் "சோமராகம்" இசைமன்றத்தினரும், நானும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"செல்விகள் இருவரின் இசை வாழ்வும் பணியும்" எனும் இச்சிறு கையேட்டை வெளியிடுதற்கு தமது விபரங்களை மன மகிழ்வுடன் எதுவித தயக்கமுமின்றி தந்துதவிய தங்கலட்சுமி செல்லத்துரை, அவரது இளைய சகோதரி யோகேஸ்வரி இராசையா, சறோஜா தம்பு ஆகிய அனைவருக்கும் எனது தாழ்மையான நன்றிகள். கௌரவ கலைஞர்களை தெரிவு செய்துகொள்வதற்கு அன்றுதொட்டு இன்றுவரை வழிகாட்டி நெறிப்படுத்தி வரும் இசைக்கலா வித்தகர் திரு.எஸ்.சிவஞானராஜா அவர்கட்கு என்றும் பணிவான நன்றிகள்.

அத்துடன் இந்நூலுருவாக்கத்திற்குரிய விபரங்களை சேகரிப்பதிலிருந்து இன்று நூல்லுருவாக்கும் வரையும் என்னுடன் தோளோடு தோள் நின்றுதவிய எனது மாணவனாகிய திரு.எஸ். சாருஜன் அவர்களிற்கும் எனது நன்றிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறுகிய காலத்தில் இச்சிறுகையேட்டை மிக அழகாகவும், நேர்த்தியாகவும் உருவாக்கி இன்று மிகக்குறுகிய நேரத்தில் எமது கைகளில் கிடைக்கச் செய்த மதிகலர்ஸ் பிறிண்டேசுக்கும் நிறுவனத் திற்கும் உளம் கனிந்த எமது நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவையனைத்தையும் செயற்படுத்துவதற்கு என்னை வானுலகிலிருந்து எப்போதும் வழி நடத்தி வரும் எனது தாயார், குருநாதர்கள் ஆகியோரின் பாதார விந்தங்களைப் பணிந்து, எல்லாம் வல்ல இறைவனையும் பக்தியுடன் வணங்கி இன்றைய இத் "திலகார்ப்பணம்" நிகழ்வில் "செல்விகள் இருவரின் இசைவாழ்வும் பணியும்" எனும் இச்சிறுகையேட்டை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**இசைக்கலாவித்தகர் திருமதி.குமுதா உமாகாந்தன்**
**ஆசிரியர்,**
**யா/ சென் ஜோண்ஸ் கல்லூரி,**
**"சோமராகம்" இசைமன்றம்,**
**நல்லூர்.**

"சோமராகம்"
323/8D, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P. 0212225685



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதபூஷணம் செல்வி. தங்கலட்சுமி செல்லத்துரை அவர்களின் இசைவாழ்வும் பணியும்



| | | |
|---|---|---|
| பிறப்பிடம் | :- | வட்டுக்கோட்டை |
| பெற்றோர் | :- | திரு.திருமதி. செல்லத்துரை பாக்கியம் |
| பிறந்த காலம் | :- | 29.10.1935 |
| இயற்பெயர் | :- | தங்கலட்சுமி |

திரு.திருமதி. செல்லத்துரை தம்பதியினரிற்கு ஐந்தாவது மகளாக தந்தையின் பெருமை கொள்ளப் பிறந்தார். இவர் மூன்று ஆண் சகோதரர்கள், மூன்று பெண் சகோதரிகளுடன் வளர்ந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை காலியிலும், இடைநிலைக் கல்வியை யா/இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார். கல்வி கற்கும் காலத்திலேயே இசைத்துறையில் நாட்டம் கொண்டவராகக் காணப்பட்டார். இதனால் பாடசாலை யிலேயே இசையை மிக்க விருப்புடனும் அவதானத்துடனும் கற்றார். அத்துடன் “சபாரட்ணம் மாஸ்டர்” என்பவரிடம் வயலினை அடிப்படையில் கற்று வந்தார்.

இவரது இசை ஞானத்தையும், அதில் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் கண்ட பெற்றோர் இவரை உயர் கல்விக்காக இந்தியாவிற்கு அனுப்பினர். அங்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து நான்கு வருடம் இசையைப் பயின்றார். அக்காலத்தில் மிகச் சிறந்த வித்வான்களாக விளங்கிய எம். எம். தண்டபாணி தேசிகர். ரி. கே. ரங்காச்சாரியார், வஜ்ரவேல் முதலியார், ராஜகோபாலபிள்ளை, ரி. என். சிவசுப்பிரமணியம்பிள்ளை ஆகியோரிடம் சங்கீதம் பயின்றதுடன், வீணை கௌரியம்மா என்பவரிடம் வீணை இசையையும் பயின்று தன் இசைத்திறனை வளர்த்துக் கொண்டார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் கற்கின்ற காலத்தில் தன்னுடன் இசையை கற்ற ஏனைய மாணவர்களுடன் இணைந்தும், தனித்தும் இசை, நாடகம், வீணை எனப் பல்வேறு ஆற்றுகைகளில் பங்கு கொண்டு தன் திறனை வெளிப்படுத்தினார். தனது நான்கு வருடக் கற்கையைப் பூர்த்தி செய்து "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்று 61ம் ஆண்டு நாடு திரும்பினார். நாடு திரும்பிய இவர் அரச ஆசிரியர் பணி கிடைக்கும் வரை இரசிகரஞ்சனசபா, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இணுவில் போன்றவற்றில் வார இறுதி நாட்களில் இசை வகுப்புக்களை நடாத்தி வந்தார். இங்கே பல மாணவர்கள் இவரிடம் கற்று வந்தனர். இது மட்டுமன்றி பல்வேறு மன்றங்கள், ஆலயங்கள் போன்றவற்றின் இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியும் வந்தார். இவரிற்கு இசைப் பக்கவாத்தியங்களாக திரு. அம்பலவாணர் அவர்கள் மிருதங்கத்தையும், திரு. சித்தி விநாயகம் அவர்கள் வயலினையும் இசைத்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 ஆம் ஆண்டு யா/இந்துக் கல்லூரியில் இணைந்து அரச பணியாற்றத் தொடங்கினார். பல்வேறு அதிபர்களின் கீழ் பணியாற்றிய இவர் இந்துக் கல்லூரியின் இசைத் துறைக்கு மிகப்பெரும் பங்காற்றிய ஆசிரியராவார். இவரது அயராத சேவை காரணமாக இவருக்கு கொடுக்கப்பட்ட இடமாற்றங்கள் கல்லூரி அதிபர்களாலேயே தடுக்கப்பட்டு இந்துவின் தாயாக விளங்கச் செய்தனர். தனது பதவி உயர்வுகள் எவற்றையும் விரும்பாது அவற்றை உதறித்தள்ளி "இந்துவின்" இசை ஆசிரியராகத் திகழ்வதிலேயே மகிழ்வும், திருப்தியும் கண்டார்.

இக்கல்லூரியில் ஆண்டுதோறும் கலை நிகழ்வுகள், சமய நிகழ்வுகள் என்வற்றை முன்னின்று நடாத்தி மாணவர்களை பங்குகொள்ளச் செய்தார். குழு இசை, தனி இசை என்பவற்றில் தேசிய ரீதியில் வெற்றிகொள்ளச் செய்தார். கீழைத்தேய வாத்திய குழுவை ஆரம்பிப்பதில் அளப்பெரும் பங்காற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அரச சேவையிலிருந்து 1996 இல் ஓய்வுபெற்ற பின்னரும் தனது ஆசிரியத் துவத்தில் இருந்த கடமையுணர்வும், அதிபர்கள், பழைய மாணவர்கள் வேண்டுகைக்கிணங் கவும் தொடர்ந்தும் 2015 ஆம் ஆண்டுவரை யாழ் இந்துவில் சேவையாற்றி, தொடர்ந்து 40 வருடத்திற்கும் மேலாக ஆசிரியப் பணியாற்றியவர் எனும் பெருமைக்குரியவர். இதனால் உலகெங்கும் பரந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான இந்துவின் மைந்தர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்தவராக, என்றும் நினைவுகூரும் ஒருவராகத் திகழ்ந்து வருகின்றார்.

இசைத்துறையில் மட்டுமன்றி தமிழ்விழா போன்றவற்றில் நடன நிகழ்வுகளையும் பயிற்றுவித்து அரங்கேற்றினார். குறிப்பாக பின்னற் கோலாட்டம் போன்றவற்றை மேடை யேற்றியதுடன் கொழும்பில் நடைபெற்ற தேசிய நிகழ் வில் பங்கேற்று அந்நிகழ்ச்சியை மேடையேற்றச் செய்து பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.

மிகத்துடினமுடைய அம்மையார் கலைகளில் மட்டுமன்றி, கூடைப்பந் தாட்டம், ஓட்டப் பந்தயம் போன்றவற்றிலும் பங்குபற்றி வெற்றி ஈட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஒரே தடவையில் 150ற்கு மேற்பட்ட மாணவர்களை சிறப்புத் தேர்ச்சி பெற்றுக்கொள்ளச் செய்தமை இசை ஆசிரியர் களிடத்தில் இவரைத் தனித்துவமாக இனங் காட்டியது. இச்சேவையை யாழ் கல்வி வலயம் வாழ்த்திப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை போன்றவற்றின் செய்முறைப் பரீட்சைகளின் பரீட்சகராக பல தடவைகள் கடமையாற்றியுள்ளார். இவற்றிற்கு வெளியே வடஇலங்கை சங்கீத சபையின் வாழ்நாள் உறுப்பினராகத் திகழும் இவர் அச்சபை வளர்வதற்கும், அச்சபையின் பரீட்சைகள் நன்முறையில் நடாத்துவதற்கும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியதுடன் அச்சபையின் பரீட் சகராகவும், பிரதம பரீட்சகராகவும், பரீட்சை மேற்பார்வையாளராகவும் திகழ்ந்துள்ளார். ஒவ்வொரு ஆசிரியர்தர செயலமர்வுகளிலும் பெண் பிள்ளைகளிற்கு இவர் ஒரு தாயாக இருந்து அரவணைத்து அவர்களின் திறனை வெளிப்படுத்தி செயற்பட வைப்பார்.

இவரது ஆசிரியத்துவத்தைப் பாராட்டி ஒவ்வொரு ஆசிரியர்தின நிகழ்விலும் பழைய மாணவர்களால் கௌரவிக்கப்படுவது சிறப்பிற்குரியது. வடஇலங்கை சங்கீத சபையினால் அமுத விழாவில் இவரது கலைச் சேவையை வாழ்த்தி கௌரவிக்கப்பட்டார். இவரது இசைச்சேவையைப் பாராட்டி நல்லூர் பிரதேச செயலக கலாச்சாரப் பேரவை 2005 ஆம் ஆண்டில் "கலைஞானச்சுடர்" எனும் விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. 2015ஆம் ஆண்டு அரச விருது விழாவில் "கலாபூஷணம்" விருதும் 2016ஆம் ஆண்டில் இந்து சமயப் பேரவையால் "திருவாசகமணி" எனும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை இவருடைய கலைச் சேவைக்கு கிடைத்த பெருமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நல்லதொரு இசைக்கலைஞர், மென்மையானதும், மிடுக்கானதுமான குரல்வளம் மிக்க இவர் சரஸ்வதி கடாட்சம் மிக்கவர். இந்துவின் மைந்தர்களை தன்வசப்படுத்திய இவர் தன் ஆளுமைத் திறனாலும், அன்பும் உரிமையும் கொண்ட கண்டிப்பும் உடைய சிறந்ததொரு ஆசான். இவரை ஓர் இசைக் கலைஞராக இனங்கண்டதைவிட நல்லதொரு இசை ஆசானாக இவ்வுலகமே அறியும்.

தன்னை நாடிவரும் இசைத்துறைசார் இளையவர்களையும் வழிப்படுத்தி செயற்பட வைக்கும் தனித்துவம் மிக்கவர். ஒருமுறை பரீட்சையில் ஒரு மாணவரது திறனை இனங் கண்டால் அம்மாணவரை ஒவ்வொரு முறை காணும் போதும் தட்டிக்கொடுத்து வளர்ச்சியைப் பற்றி கேட்டறிவார். அது யாராகவும் இருக்கலாம். அல்லது யாருடைய மாணவராகவும் இருக்கலாம். அவர்களது திறனை மெச்சும் பண்பு வேறெவருக்கும் இருப்பதில்லை.

பெரும்பான்மையான இசைக்கலைஞர்கள் கர்வத்துடன் ஏனைய கலைஞர்களையோ, இளையவர்களையோ மதிக்க மறுப்பர். ஆனால் பெயரிற்கேற்ப "லட்சுமியாய்", அன்னையாய் மிடுக்குடன் அனைவரையும், அவர்திறன் பாராட்டி, செந்தழிப்பான புன்னகையுடன் கூடிய வதனத்துடன் தோன்றும் இவரை "சோமராகம்" இசை மன்றத்தினால் சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் "திலகார்ப்பணம்" நிகழ்வில் "இசைத் திலகம்" எனும் விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றோம். என்றும் உடல் நலத்துடன் லட்சுமி கடாட்சமாக – அன்னையாகத் திகழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் செல்வி. சறோஜா தம்பு அவர்களின் இசைவாழ்வும் பணியும்



பிறப்பிடம் :- சீனப்புலம், வதிரி, கரவெட்டி

பெற்றோர் :- திரு.திருமதி. தம்பு செல்லம்மா தம்பதியர்

பிறந்த காலம் :- 24.10.1942

இயற்பெயர் :- சறோஜா

வடமராட்சிப் பகுதியில் 1850 களில் இசைநாடனக் கலையை வளர்த்த பெருமை அண்ணாவி, விதானை வல்லியார் கந்தர் குடும்பத்தைச் சாரும். இவர்களால் அக்காலத்தில் இசை, நாடகம் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டன. அக்கலைப் பரம்பரையில் தோன்றிய கந்தவனம் தம்பு செல்லம்மா தம்பதியினரின் ஏழாவது செல்வ மகளாக அவதரித்தவரே செல்வி. சறோஜா அம்மையார். இவர் மூன்று தமையன்மாருடனும், இரண்டு தமக்கைமாருடனும் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாட சாலையிலும் தொடர்ந்து 1952 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது 5 ஆம் வகுப்புத் தொடக்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தார். தனது பாடசாலைக் கல்வியை S.S.E வரை அங்கேயே கற்றார். பரம்பரையாக கலை ஞானம் கைவரப் பெற்ற இவர் பாடசாலை யில் கற்ற காலத்திலேயே நல்ல குரல் வளமும், இசை ஆற்றலும் உடையவராகத் திகழ்ந்தார்.

இவரது இசைஞானத்தின் காரணமாக இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசையை உயர் கல்வியாக கற்பதற்கு 1960 ஆம் ஆண்டு சென்றார். இந்தியாவில் இசை ஜாம்பவான்களாகத் திகழ்ந்தோரே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்பித்து வந்தனர். அந்தவகையில் எம். எம். தண்டபாணி தேசிகர், அவர் சகோதரர் ரி. என். சிவசுப்பிர மணியப்பிள்ளை, ரி. கே. ரங்காச்சாரியார், வஜ்ரவேல் முதலியோர், ராஜமாணிகம்பிள்ளை போன்றோரிடம் கற்றார். அக்காலத்தில் எம்.எம். தண்டபாணி தேசிகரிடம் பயின்றவர்கள் அதனை மிகப் பெருமையாகக் கூறுவதை இன்றும் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கு பாடவிதானத்திற்கமைவாக மிருதங்க தத்தகாரச் சொற்களையும், வயலின், ஹார்மோனியம் போன்ற இசைக்கருவிகளை இசைக்கவும் கற்றுக் கொண்டார். எனினும் உப பாடமாக வீணையை கௌரிகுமாரி, கோமதி சிங்கரப்பிள்ளை போன்றோரிடம் கற்றுக்கொண்டார். இதனால் வீணையை நன்முறையில் இசைக்கக் கூடியவராகத் திகழ்ந்தார்.

பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்தில் தனி இசை, குழுஇசை எனப் பல்வேறு இசை நிகழ்வுகளிலும் கலந்து கொண்டதுடன் அங்கு அனைவருக்கும் செல்லப்பிள்ளையாகவும் திகழ்ந்தார்.

இவர் இந்தியாவில் கற்கின்ற காலத்தில் மறைந்த கலைஞர்களான திரு. எஸ். கணபதிப்பிள்ளை, திரு. எல். திலகநாயகம்போல், திருமதி. தர்மபூபதி சிதம்பரநாதன், இன்று கௌரவிக்கப்படுகின்ற செல்வி. தங்கலட்சுமி செல்லத்துரை என அனைவரும் இலங்கை யிலிருந்து இந்தியா சென்று முன் பின்னாக சமகாலத்தில் கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இளமையும், அழகும், இசைஞானமும், துடினமும் கொண்டு இவர்கள் அனைவருக்கும் குட்டித் தங்கையாக இருந்துள்ளார் என்பதை உணரமுடிகின்றது. தொடர்ந்து நான்கு வருட முடிவில் ""சங்கீதபூஷணம்"" சிறப்புச் சித்தி பெற்றார்.

இந்தியாவிலிருந்து 1964 ஆம் ஆண்டு தாய்நாடு மீண்ட இவர் வடமராட்சி றோட்டறிக் கழகத்தில் தனது ஒன்றுவிட்ட சகோதரி செல்வி ஜச்னா தேவி செல்லையா உடன் இணைந்து இசையை அரங்கேற்றினார். தொடர்ந்து வடமராட்சி நகர மண்டபத்திலும் இசை நிகழ்வு நடைபெற்றது. இவரது முன்னைய இசைக் கச்சேரிகளிற்கு எஸ். ராமநாதன், ராதாகிருஷ்ணன் போன்றோர் அணியிசைக் கலைஞர்களாக கலந்து சிறப்பித்துள்ளனர். பின்னர் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களையே பக்கவாத்தியத்திற்கு தயார்செய்து அவர்களை இசைக்கச் செய்துள்ளார். அவர்களில் மிருதங்க வித்துவான் திரு.வ.ரமணா அவர்களை அம்மையார் பெருமையுடன் குறிப்பிடுகின்றார்.




தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு மன்னார் சித்தி விநாயகர் பாடசாலையில் இணைந்து தனது அரச இசைச்சேவையை ஆரம்பித்தார்.

அரச சேவையில் இவர் கடமையாற்றிய இடங்கள்

1. 1966 – ஆசிரியர் – மன்னார் சித்தி விநாயகர் பாடசாலை
2. 1968 – ஆசிரியர் – நாவலப்பிட்டி தமிழ்கலவன் பாடசாலை (மஸ்கெலியா)
3. 1970 – அதிபர் – நாவலப்பிட்டி தமிழ்கலவன் பாடசாலை (மஸ்கெலியா)
4. 1978 –பகுதிநேர விரிவுரையாளர் – ஆசிரியர் பயிற்சி கலாசாலை – தலவாக்கலை
5. 1979 – தமிழ் விசேட பயிற்சி – தலவாக்கலை ஆசிரிய பயிற்சி கலாசாலை
6. 1981 – ஆசிரியர் – மஸ்கெலியா – சென்யோசப் மகாவித்தியாலயம்
7. 1985 – ஆசிரியர் – யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
8. 1990 – ஆசிரிய ஆலோசகர் – யா/ வடமராட்சி கோட்டம்
9. 1995 – உதவிக்கல்விப் பணிப்பாளர் – யா/ வடமராட்சி கல்வி வலயம்

இவ்வாறு மன்னாரில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் நாவலப்பிட்டி, நெல்லியடி எனப் பல்வேறு இடங்களிலும் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பகுதிநேர ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக, ஆசிரிய ஆலோசகராக, அழகியல்பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக என பல்வேறு தளங்களிலும் தனது சேவையை மிகச் சிறப்பாக ஆற்றி 24.10.2002 அன்று அரச சேவையினின்றும் ஓய்வுபெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பாடசாலையில் சேவையாற்றிய காலத்தில் தனது மாணவர்களை பல்வேறு நிகழ்ச்சிகளிற்கும் தயார்செய்து மேடையேற்றினார். தனிஇசை, குழுஇசை என்பவற்றில் தேசிய நிலையில் பரிசில்பெறச் செய்தார். தனது பாரம்பரிய இசைநாடகப் புலமையைக் கொண்டு தனது மாணவர்களிற்கு பல்வேறு இசை நாடகங்களை பழக்கி மிகச்சிறப்பாக மேடையேற்றி பலரது பாராட்டையும் பெறச்செய்தார். அவ்வாறான இசைநாடகங்களில் "வாலிவதம்" எனும் இசைநாடகம் பாடலை பல மேடையேற்றப்பட்டு அனைவராலும் மிகவும் புகழ்ந்து பாராட்டப்பட்டது. அதற்குரிய பெருமை இவரையே சாரும்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் "இன்னியம்" (Band) ஆரம்பிப்பதற்கு மிக முக்கிய கர்த்தாவாக விளங்கிய இவர் தனது வடமராட்சி வலய மாணவர்களைக் கொண்டு யாழ்ப்பாணம் நல்லூரிலிருந்து – யாழ் இந்து மகளிர் கல்லூரி வரை இன்னியத்தை நிகழ்த்திக் காட்டினார்.

1974 ஆம் ஆண்டு முதல் வடஇலங்கை சங்கீதசபையில் இணைந்து கொண்ட அம்மையார், வடஇலங்கை சங்கீதசபை பரீட்சைகளில் பரீட்சகராக, பிரதம பரீட்சகராக, பரீட்சை மேற்பார்வையாளராக, உற்சவ பொறுப்பாளராக 1990 இலிருந்து குழு உறுப்பினராக எனப் பலதரப்பட்ட நிலையில் சேவையாற்றியுள் ளார். ஆண்டுதோறும் நடைபெறும் தியாராஜ ஸ்வாமிகள் ஆராதனை விழாவை முன்னின்று நடாத்துவதுடன், பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை தானும் இணைந்து முன்னின்று பாடுவார். ஒருமுறை இவ்விழாவை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் முன்னின்று சிறப்புற நடாத்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றார். அது மட்டுமன்றி வடஇலங்கை சங்கீதசபை பரீட்சைப் பாடவிதானம் தயாரிப்பதில் முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவராவார். வடஇலங்கை சங்கீதசபை ஆசிரியர்தர கருத்தரங்குகளைத் தானே முன்னின்று நடாத்திஞ மாணவர்களை வழிப்படுத்துவதுடன் தானும் முக்கிய பகுதிகளில் கருத்துரை ஆற்றி மாணவர்களை மேம்படச் செய்தவர்.

1983 இல் யா/ நெல்லியடி அரங்கக் கலாசாலையை ஆரம்பித்து இன்றுவரை நுண்கலைப் பாடங்களை நடாத்தி வருகின்றார். இதில் தான் மட்டுமன்றி வயலின், வீணை என ஏனைய பாடங்களைக் கற்பிப்பதற்கு தகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து சிறப்புற நடாத்தி வருவதுடன் கலை விழாக்களையும் நடாத்தி வருகின்றார். அத்துடன் 2015 இல் நெல்லைக் கல்லூரியை ஆரம்பித்து நுண்கலை பாடங்கள் பயிற்றப்படுவதுடன் வடஇலங்கை



சங்கீதசபைப் பரீட்சைகளுக்கும் தயார் செய்யப்படுகின்றனர். இதன் மூலம் வருடாவருடம் இருந்த மாணவர்கள் வெளி வருகின்றமை குறிப்பிடத் –தக்கது.

இவர் பெற்ற பட்டங்களும் விருதுகளும்

1. 1968 – "யாழ் இசைச் செல்வி" – ஹட்டன் நுவரேலியா கல்விப்பிரிவு
2. 1982 – "பண்ணிசைச் செல்வி" – மஸ்கெலியா சண்முகநாதர் ஆலயம்
3. 2002 – "இசைவாணி" – நெல்லியடி சனமூக நிலையம்
4. 2002 – "இசைஞானகேசரி" – வடமராட்சி வலயம்
5. 2004 – "கலைஞர் கௌரவிப்பு" – வடமராட்சி கலாசாரப் பேரவை
6. 2008 – "கலாபூஷணம்" – இந்து கலாசார அமைச்சு
7. 2009 – "ஆளுநர் விருது" – வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
8. 2012 – "கலைவாரிதி" – வடமராட்சி கல்வி வலயம்
9. 2013 – "யாழ் ஓசை விருது" – யாழ் மாநகரசபைஷ
10. 2013 – "மூத்த கலைஞர் கௌரவம்" – வடஇலங்கை சங்கீதசபை
11. 2014 – "சமூக பிரவாகினி" – கரவெட்டி மகளிர் அபிவிருத்தி
12. 2015 – "தலைக்கோல்" – கொழும்பு தமிழ்ச்சங்கம்
13. 2016 – "திருவாசகமணி" – யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை
14. 2018 – "சிவஞானஜோதி" – சைவமகா சபை

இவ்வாறு பல்வேறு விருதுகளும், கௌரவங்களும் பெற்ற இவர் சிறந்த மேடைப் பேச்சாளராவார். கொடுக்கப்படும் தலைப்புகளிற்கேற்ப எதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகப் பேசக்கூடிய ஆற்றல் உடையவர். வடஇலங்கை சங்கீதசபை ஆசிரியர்தரக் கருத்தரங்குகளில் கருத்துரைகளை மிகத் தெளிவாக முன்வைத்து மாணவர்கள் பயன்பெறச் செய்தவர். பாடசாலையில் காலைக் கூட்டங்களில் நல்உரையாற்றுபவர். 2010/2012 – லண்டன் சென்று அங்கு நல்லுரையாற்றிக் கௌரவிக்கப்பட்டார்.

2015ஆம் ஆண்டு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் கலை அரங்கில் "தமிழோடிசை பாடல்" எனும் தலைப்பில் சிறந்த உரையாற்றி தமிழ் அறிஞர்கள் பலரதும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் பெற்றார்.

தேவாரப் பாடல்களை பண்ணோடு பாடும் இவர், மாணவர்களையும் பண்ணோடு தேவவாரப் பதிகங்களைப் பாடச்செய்து வடமராட்சி வலயத்தில் பண்ணிசை மிளிர்வதற்கும் அளப்பரிய பங்காற்றியுள்ளார். இவை மட்டுமன்றி சிறப்பாகப் புராணபடனம் செய்யக்கூடிய இவர் மாணவர்களிற்கும் "புராணபடனம்" செய்யும் பயிற்சி கொடுத்து மாகாண மட்டத்தில் புராணபடனப் போட்டியில் வெற்றிபெறச் செய்தார்.

கலை வாணியாசத்திகழும் இவர் ஒரு "ஞானவாணியும்" கூட. தான் இந்தியாவில் கற்கும் காலத்திலேயே இல்லறத்தை துறக்க விரும்பி உருத்திராட்சத்தை அணிந்து இறையர்ப் பணத்தை விரும்பி ஏற்றார். 1990களில் இருந்து ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தின் சிறுவர், முதியோர் இல்லத்தின் தலைவராக, செயலாளராக, பொருளாளராக என பதவிவகித்து அதனைத் தனது சேவையாகத் தலைமேற்கொண்டு இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருகிறார்.

செல்லச்சந்நிதியின் ஆச்சிரமத்துடன் இணைந்து மாதந்தோறும் தெய்வீக இசையரங்கை நடாத்துவதற்கு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி தன்னாலான ஒத்துழைப்பை நல்கி வருகின்றார். அத்துடன் பண்ணிசை இசைத்தல், திருவாசக முற்றோதல் நிகழ்த்துதல், புராணபடனம் நிகழ்த்துதல் என்பவற்றிலும் கலந்து சிறப்புற நிகழ்த்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடம் பாடசாலை ரீதியாக மட்டுமன்றி அரங்கக் கலாசாலையூடாக வும், வீட்டில் தனிப்படவும் எனப் பல மாணவர்கள் வெளியேறியுள்ளனர். எனினும் திரு. கிருஷ்ணானந்தன், திரு. வ. ரமணா என்போர் இன்றும் இவரது பெயர் விளங்க தமது திறமைகளைப் பறைசாற்றி வருவதை அவதானிக்க முடிகின்றது.

மென்மையான உணர்வும், சிறந்த சாரீரவளமும், அழகிய வதனமும் கொண்ட இவர் கழுத்தில் உருத்திராட்ச மாலையுடன் பார்ப்போரிற்கு பயபக்தியைத் தோற்றுவிக்கும் தெய்வீகப் பொலிவும் உடையவர். இவர் உருவப்பொலிவில் மட்டுமன்றி குணத்திலும் இளையவர்களை பக்தியுடன் ஆசீர்வதிக்கும் பண்பும், வழிப்படுத்தும் திறனும் அவரது வயதை எவரும் எடைபோட முடியாத அளவிற்கு இளமைத் தோற்றமும் கொண்டு "ஞானகுரு" வாகத் திகழ்கின்றார்.

இசைச்சிறப்பு, கலைச்சிறப்பு, பக்தியுணர்வு, தெய்வீகப் பொலிவு என அனைத்தும் கைவரப் பெற்ற இந்த ஞானவாணி வடமராட்சி மண்ணிற்கு கிடைத்த பெரும் பேறாகும். தனது ஊரிற்கும் நாட்டிற்கும் கலைச்சேலை, ஞானச்சேலை, பொது அறப்பணிகள் புரிந்து வரும் அம்மையாரிற்கு கிடைத்த பட்டங்களும், விருதுகளும் போதாதே.

இன்றைய சமுதாயம் மேன்மேலும் தனது கல்வி, கலை ஞானத்தை வளர்த்து நற்பண்புடையோராய் தலைக்கணமேதுமின்றி தனது ஊரிற்கும், நாட்டிற்கும் நற்சேவையாற்ற வேண்டும் என விரும்புகின்றார். ஒவ்வொரு ஆசிரியரும் தன்னை ஆளுமைப்படுத்தி என்றும் கற்ற வண்ணம் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கலை ஆசிரியருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையோ, போட்டிகளையோ தயாரித்தல் என்பது ஒரு பரீட்சையே. அதற்காக நன்கு வளர்த்து தன்னைத்தயார்செய்து நன்முறையில் மாணவர் திறனறிந்து அவர்களுக்கேற்ப தயார்படுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார். நற்பண்பும், பணிவும், கலைஞானமும் ஒருவரை உயர்விற்கு இட்டுச் செல்லும் என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கலைவாணியின் சேவை எமது மண்ணிற்கு என்றும் ஈடிணையற்றது. அவரது சேவையைப் பாராட்டுமளவிற்கு நாம் உயர்ந்தவர் களல்லர். எனினும் எனது குருநாதரின் ஞாபகர்த்தமாக வழங்கப்படும் 2022 ஆம் ஆண்டிற்குரிய "இசைத்திலகம் தினை வழங்கி அவரை கௌரவித்து அவர் தம் பாதம் பணிந்து அவரது சேவையை அடுத்துவரும் சமுதாயத்திற்கு எடுத்துச் செல்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org